# ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி

## நிரவி-காரைக்கால்-609604

**வகுப்பு : ஆறாம் நிலை (அ/ஆ/இ/ஈ)**

**பாடம் : தமிழ் - இரண்டாம் மொழிப்பாடம், பயிற்சித் தாள் -1 2022-2023**

### பகுதி –அ படித்தல் திறன்

**1.பின்வரும் பத்தியைப்படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்வு செய்க.**

மரங்கள் நம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அரண் எனக் கூறலாம். மரங்கள் தான் மண் வளத்தைப் பேணிக் காக்கிறது. மரங்கள் பகலில் உயிர்க்காற்றை நமக்கு தருகின்றது. புவியின் வெப்பத்தைத் தணிக்க உதவுகிறது. ஆனால் மனிதர் சுயநலத்திற்காக மரங்களை வெட்டி அதிலிருந்து காகிதம், இரப்பர், கோந்து, மேஜை, நாற்காலி போன்ற அழகிய மரப்பொருட்களை செய்து விற்கின்றனர். இதனால் மனிதர் எதிர்கொள்ளப்போகும் துயரங்கள் ஏராளம். இந்தியாவில் 60 சதவீதம் மரம் இருக்க வேண்டும். அசோகச் சக்கரவர்த்தி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மரத்தின் அருமையை உணர்ந்து சாலையின் இரு மருங்கிலும் எண்ணற்ற மரங்களை நட்டார். எனவே, நாம் மரம் வளர்ப்போம். அரசாங்கமே ஒருவர் பத்து மரம் வளர்க்க வேண்டும் என சொல்கிறது. மரங்கள் மனிதருக்கு மட்டும் அல்லாது எண்ணற்ற உயிர்களுக்கு அரணாக உள்ளது. மரங்கள் பல மருத்துவ குணம் வாய்ந்தவை.

**வினாக்கள்:-**

1. **மரங்களில் இருந்து நமக்கு கிடைக்கும் பொருட்கள் என்னென்ன?**
   அ) காகிதம்,கண்ணாடி ஆ) காகிதம்,மோசை இ) காகிதம்,சுண்ணாம்பு
2. **அசோகச் சக்கரவர்த்தி மரங்களை எங்கு நட்டார்?**
   அ) சாலை ஆ) ஊர் இ) மலை
3. **மரங்களை என்னவென்று அழைக்கலாம்?**
   அ) வேலி ஆ) அரண் இ) கோட்டை
4. **மரங்கள் மனிதருக்கு எக்காற்றைத் தருகிறது?**
   அ) கரியமில வாயு ஆ) உயிர்க்காற்று இ) பிராணவாயு
5. **மரங்கள் எதைப் பேணி காக்கிறது?**
   அ) மண்வளம் ஆ) மனிதவளம் இ) நாட்டுவளம்

**2. செய்யுள் வினாவிற்கு விடையளி.**

நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் - இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து

**வினாக்கள்**

1. நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகளாக ஆசாரக்கோவை குறிப்பிடுபவை -----------
   (அ) ஆறு (ஆ) எட்டு (இ) ஒன்பது
2. இப்பாடலின் தலைப்பு என்ன?
   (அ) அறிவியல் ஆத்திசூடி (ஆ) மூதுரை (இ)) ஆசாரக்கோவை
3. நட்டல் - இச்சொல்லின் பொருள் யாது?
   (அ) நன்மை செய்தல் (ஆ) நட்புக் கொள்ளுதல் (இ) நறுமணம் வீசுதல்

4. இப்பாடலின் ஆசிரியர் யார்?

(அ) பெருவாயின் முள்ளியார் (ஆ) பாரதியார் (இ) இளங்கோவடிகள்

5. ஆசாரக்கோவை --------------------- நூல்களுள் ஒன்று.

(அ) எட்டுத்தொகை (ஆ) பதினெண்மேற்கணக்கு (இ)பதினெண்கீழ்க்கணக்கு

**3. பின்வரும் மனப்பாட குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக.**

1. சொல்லுக ------------------ பயனுடைய சொல்லற்க
   சொல்லில் பயன்இலாச் சொல்.

   அ. சொல் ஆ. சொல்லில் இ. சொல்லும்

2. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
   ----------------- கள்வேம் எனல்

   அ. கள்ளத்தால் ஆ. உள்ளத்தால் இ. காலத்தால்

3. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
   எடுப்பதூஉம் எல்லாம் ---------------------

   அ. துணை ஆ. வினை இ. மழை

4. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
   ------------------ எனக்கேட்ட தாய்

   அ. சான்றோன் ஆ. சிறியோன் இ. பெரியோன்

## பகுதி –ஆ எழுதுதல் திறன்

**4. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.**

1. ஒளி பிறந்தது
2. கிழவனும் கடலும்
3. மனம் கவரும் மாமல்லபுரம்

**5. பின்வரும் படம் பார்த்து உன் சொந்த நடையில் எழுதுக. (பத்து வரிகளுக்கு மிகாமல்)**

